கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:- திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாள் திங்கள்க்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2023**

அதன்

**அசல் வழக்கு எண்.510/2023**

( CNR No.TNTS 01 001563 2023 )

ராமதாஸ் ... மனுதாரர்/வாதி

..எதிர்..

மகேந்திரன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த இடைநிலை மனுவானது கடந்த 30.09.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சைலபதிசிவஞானம் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.முருகன் அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 38 விதி 5 மற்றும் பிரிவு 151-ன் கீழ், மனுதாரர்/வாதிக்கு, எதிர்மனுதாரர் / பிரதிவாதியிடமிருந்து வசூலாக வேண்டிய பிராது தொகை ரூ.46,34,568/-ற்கு நீதிமன்றத்தில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தக்க ஜாமீன் கொடுக்கவும் தவறும்பட்சத்தில் மனு தபசில் சொத்தை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பிரதான வழக்கானது இந்த மனுதாரரிடம், எதிர்மனுதாரர் பெற்ற கடன் தொகை ரூ.29,15,800/-ஐ வட்டியுடன் சேர்த்து எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்காக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் பல தவணைகளில் மனுதாரரிடம் வங்கி பரிவர்த்தனை மூலமாக ரூ.51,35,700/- கடனாகப் பெற்றுள்ளார் ஆனால், வங்கி கணக்கு மூலமாக ரூ.20,77,200/- மட்டும் திரும்பச் செலுத்தியுள்ளார். பாக்கி ரூ.24,65,800/- எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த வேண்டியதாக உள்ளது. பின்னர் வேறு ஒரு நபருடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்காக வேண்டி எதிர்மனுதாரர், மனுதாரரிடம் ரூ.4,50,000/- பெற்றுக்கொண்டுவிட்டு பின்னர் கொடுக்காமல் நாள் கடத்தி வருகிறார். மேலும், எதிர்மனுதாரர்,

மனுதாரரிடம் ரொக்கமாக பல தவணைகளில் ரூ.37,52,500/- கடனாகப் பெற்றுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர், மனுதாரர் பலமுறை கேட்டும் கடன் தொகையை திரும்பச் செலுத்தவில்லை. மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய அசல் தொகை ரூ.45,43,000/- ற்கு 01.10.2020 ஆம் தேதியன்று புரோநோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி அசல் தொகையில் ஏற்கனவே செலுத்திய ரூ.20,77,200/- போக மீதி தொகை ரூ.29,15,800/- செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி கடன் தொகையை செலுத்தாமல் ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் மனுத் தபசில் சொத்தை வில்லங்கப் பாராதீனங்கள் செய்துவிட முயற்சித்து வருகிறார். எதிர்மனுதாரர் அவ்வாறு செய்துவிட்டால் மனுதாரர், எதிர்மனுதாரரிடமிருந்து கடன் தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடும். எனவே பிராது தொகையான ரூ.46,34,568/-ற்கு தகுந்தாற்போல் எதிர்மனுதாரர் தக்க ஜாமீன் பிறப்பித்துக் கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மனுத் தபசில் சொத்தை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிருரையின் சுருக்கம்**:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுச் சங்கதிகள் உண்மையானவைகள் அல்ல. உண்மையில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் உள்ள பண பரிவர்த்தனையை முடிவிற்கு கொண்டு வரும்பொருட்டு எதிர்மனுதாரர் தன்னுடைய வீட்டைப் பொறுத்து மனுதாரருடன் கடந்த 10.09.2020 அன்று ரூ.4,00,000/- க்கு ஒரு பதிவு கிரைய ஒப்பந்தம் பிறப்பித்துக் கொண்டு விட்டு பின்னர் மேற்படி பணத்தை வங்கி பரிவர்த்தனை மூலம் திருப்பிச் செலுத்திவிட்டு கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டார். எனவே, எதிர்மனுதாரர், வங்கி மூலமாக கிரைய முன் பணத்தை செலுத்தி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்ட நிலையில் பிற்பாடாக மனுதாரர் கூறியபடி எதிர்மனுதாரரே ஒரு கடன் ஒப்புதல் உறுதிமொழி ஆவணம் எழுதிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் மனுதாரர், எதிர்மனுதாரர் மீது பொய்யாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, அதன்பேரிலான விசாரணையின்போது உண்மை அறிந்து காவல்துறையினர் மனுதாரரை கண்டித்து அனுப்பினர். எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எந்தவித தொகையும் கொடுக்க வேண்டியதில்லை. எனவே எதிர்மனுதாரர், மனுதாரர் கோரியவாறு செக்யூரிட்டி செலுத்தக் கடமைப்பட்டவரல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

’இம்’மனு அனுமதிக்கக் கூடியதா?”

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **பிரச்சனைக்கான தீர்வு**:-

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பிரதான வழக்கானது இந்த மனுதாரரிடம், எதிர்மனுதாரர் பெற்ற கடன் தொகை ரூ.29,15,800/-ஐ வட்டியுடன் சேர்த்து எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்காக வேண்டி தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் பல தவணைகளில் மனுதாரரிடம் வங்கி பரிவர்த்தனை மூலமாக ரூ.51,35,700/- கடனாகப் பெற்றுள்ளார் ஆனால், வங்கி கணக்கு மூலமாக ரூ.20,77,200/- மட்டும் திரும்பச் செலுத்தியுள்ளார். பாக்கி ரூ.24,65,800/- எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த வேண்டியதாக உள்ளது. பின்னர் வேறு ஒரு நபருடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்காக வேண்டி எதிர்மனுதாரர், மனுதாரரிடம் ரூ.4,50,000/- பெற்றுக்கொண்டுவிட்டு பின்னர் கொடுக்காமல் நாள் கடத்தி வருகிறார். மேலும், எதிர்மனுதாரர், மனுதாரரிடம் ரொக்கமாக பல தவணைகளில் ரூ.37,52,500/- கடனாகப் பெற்றுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர், மனுதாரர் பலமுறை கேட்டும் கடன் தொகையை திரும்பச் செலுத்தவில்லை. மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய அசல் தொகை ரூ.45,43,000/- ற்கு 01.10.2020 ஆம் தேதியன்று புரோநோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி அசல் தொகையில் ஏற்கனவே செலுத்திய ரூ.20,77,200/- போக மீதி தொகை ரூ.29,15,800/- செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி கடன் தொகையை செலுத்தாமல் ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் மனுத் தபசில் சொத்தை வில்லங்கப் பாராதீனங்கள் செய்துவிட முயற்சித்து வருகிறார். எதிர்மனுதாரர் அவ்வாறு செய்துவிட்டால் மனுதாரர், எதிர்மனுதாரரிடமிருந்து கடன் தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடும். எனவே பிராது தொகையான ரூ.46,34,568/-ற்கு தகுந்தாற்போல் எதிர்மனுதாரர் தக்க ஜாமீன் பிறப்பித்துக் கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மனுத் தபசில் சொத்தை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்ய வேண்டியது அவசியம் என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. எதிர்மனுதாரர் தரப்பிற்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டும் எதிர்மனுதாரர் தரப்பில் வாதுரையின்போது எவ்வித எடுத்துரைப்பும் இல்லை.

8. இந்த மனுவை மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 38 விதி 5–ன் கீழ் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரிடம், இந்த எதிர்மனுதாரர் பெற்ற கடனை வசூலிப்பதற்காகவே அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய கடன் தொகையை எதிர்மனுதாரர் செலுத்தாமல் மோசடி செய்யும் நோக்கத்தில் தபசில் சொத்தை வேறு மூன்றாம் நபர்களுக்கு கிரையம் செய்ய முயற்சித்து வருவதாகவும், எதிர்மனுதாரர் அவ்வாறு செய்துவிட்டால் எதிர்மனுதாரரிடமிருந்து வரப்பெற வேண்டிய தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடக் கூடும் என்று எனவே மனுதாரருக்கு பிராது தொகையான ரூ.46,34,568/-ற்கு தகுந்தாற்போல் எதிர்மனுதாரர் தக்க ஜாமீன் பிறப்பித்துக் கொடுக்க வேண்டியது அவசியமானது என்பதும் மனுதாரரின் பிரதான வாதமாகும். மேற்படி வாதத்திற்கு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு எதிருரை தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், பின்னிட்டு எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையின்போது எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. இருந்தபோதிலும், அசல் வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர் அவரது தொழில் வளர்ச்சிக்காக அவ்வப்போது மனுதாரரிடம் கடன் பெற்றுள்ளதாகவும், மேற்படி தொகையானது வங்கி பரிமாற்றத்தின் மூலமாக நடைபெற்றுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டிருந்தாலும், மனுதாரர் தரப்பிலான வழக்கிற்கு, எதிர்மனுதாரர் தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. உபயதரப்பினர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள அசல் வழக்கின் பிரச்சனை

குறித்த தீர்வானது வழக்கின் முழுமையான விசாரணைக்குப் பின்னர் தான் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். இருந்தபோதிலும், மனுதாரர் தரப்பு வழக்குப்படி எதிர்மனுதாரருக்கு கடன் ஒப்புதல் உறுதிமொழி ஆவணத்தின் அடிப்படையில் ரூ.51,35,700/- கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் அதனை ஆட்சேபித்து எதிர்மனுதாரர் வங்கி மூலமாக கிரைய ஒப்பந்ததத்திற்காக எதிர்மனுதாரர், மனுதாரரிடம் பெற்ற பணத்தை செலுத்தி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்ட பின்னர், மனுதாரர் காவல்நிலையத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் தரப்பில் அவ்வாறு எந்த புகார் குறித்த சங்கதியும் தெரிவிக்கப்படவில்லை. அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 38 விதி 5 ஆனது பாதுகாப்பற்ற கடனானது பாதுகாக்கப்பட்ட கடனாக மாற்றுவதற்கான நோக்கம் கிடையாது. மேலும், **Raman Tech. & Process Engg. Co., and another ..vs.. Solanki Traders** என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் கீழ்க்கண்டவாறு தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

*The power under Order 38 Rule 5 CPC is drastic and extraordinary power. Such power should not be exercised mechanically or merely for the asking. It Should be used sparingly and strictly in accordance with the Rule. The purpose of Order 38 Rule 5 is not to convert an unsecured debt into a secured debt. Any attempt by a plaintiff to utilize the provisions of Order 38 Rule 5 as a leverage for coercing the defendant to settle the suit claim should be discouraged. Instances are not wanting where bloated and doubtful claims are realised by unscrupulous plaintiffs by obtaining orders of attachment before judgment and forcing the defendants for out of court settlement, under threat of attachment.*

மேற்படி முன்தீர்முடிவின் அடிப்படையிலும், இம்மனுவில் ஏற்பட்டுள்ள மேற்பட்டுள்ள நிகழ்வுகளை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் இந்த மனுவானது இந்தச் சூழ்நிலையில் அனுமதிக்கக் கூடியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டடது.

(ஒம்) எஸ்.மனோஜ்குமார்
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்**

இல்லை

(ஒம்) எஸ்.மனோஜ்குமார்
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

இடைநிலை மனு எண்.1/2023

அதன்

அசல் வழக்கு எண்.510/2023

உத்தரவு (நேரிய)

நாள்: 21.10..2024

---